2	கொப்பனுபட்டி	152	20	இராயவரம்	26
3	கடியாபட்டி இராமச்சந்திரபுரம்	132	21	குருவிக்கொண்டான் பட்டி	26
4	கொத்தமங்கலம்	105	22	கீழச்சிவற்பட்டி பி. அளகாபுரி	25
5	தேவகோட்டை	104	23	மிதிலைப்பட்டி	21
6	காரைக்குடி	93	24	கோ. அளகாபுரி	20
7	நெற்குப்பை	86	25	தேனிபட்டி	14
8	கோட்டையூர்	53	26	வலையபட்டி	13
9	புதுவயல்	51	27	பூலாங்குரிச்சி	8
10	பலவான்குடி	50	28	செவ்வூர்	8
11	கானுடுகாத்தான்	43	29	கருங்குளம்	7
12	வேந்தன்பட்டி	37	30	மேலச்சிவபுரி	6
13	பனையப்பட்டி	36	31	ஆ. தெக்கூர்	5
14	இராங்கியம்	31	32	உலகம்பட்டி	4
15	குளிபிறை	30	33	கோனுபட்டு	3
16	நேமத்தான்பட்டி	30		ஆகமொத்தப்புள்ளி	1486
17	கண்டனூர்	29			
18	நாட்டரசன்கோட்டை	29			

சூரக்குடி கோவில் நகரத்தார்கள் இருக்கும் ஊர்களும் புள்ளி விபரங்களும்

1	கீழச் சிவற்பட்டி	139	15	பட்டமங்கலம்	21
2	செவ்வூர்	90	16	கண்டரமாணிக்கம்	15
3	வேகுப்பட்டி	69	17	கல்லல்	10
4	புதுவயல்	47	18	விரையச்சிலை	8
5	அ. சிறுவயல்	44	19	மிதிலைப்பட்டி	6
6	கானையார் மங்கலம்	37	20	கழனிவாசல்	4
7	நாட்டரசன் கோட்டை	33	21	ஆவினிப்பட்டி	4
8	காரைக்குடி	33	22	பனையப்பட்டி	3
9	பள்ளத்தூர்	30	23	சண்முகநாதபுரம்	3
10	கண்டனூர்	28	24	பாகனேரி	3
11	பூலாங்குரிச்சி	28			
12	குருவிக்கொண்டான்பட்டி	28		ஆக மொத்தப்புள்ளி	735
13	நெற்குப்பை	27			
14	பனங்குடி நடராஜபுரம்	25			

வேலங்குடி நகரத்தார்கள் இருக்கும் ஊர்களும் புள்ளி விபரங்களும்

1	கருங்குளம்	10	4	பட்டமங்கலம்	2
2	தேவகோட்டை	5			
3	காரைக்குடி	5		ஆக மொத்தப்புள்ளி	22

உ

நகரத்தார் சங்கம்

'நகர விடுதி'
25, வடக்குச்சித்திரை வீதி,
மதுரை—1.
26—8—62

மதுரை மீனுட்சி அம்மன் கோவில் கும்பாபிடேகச் சுற்றறிக்கை

நிகழும் சுபகிருது ஆண்டு ஆவணித் திங்கள் 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று 'கலைத்தந்தை' திரு கருமுத்து தியாகராசன் செட்டியார் அவர்கள் தலைமையில் நடந்த பேரவைக் கூட்டத்தில் மதுரை மீனுட்சி அம்மன் கோவில் திருப்பணி வேலைகள் முடிந்த வுடன் முன்பு இக்கோவிலில் நம் மரபினர் இரு கும்பாபிடேகங்களை நடத்தியது போல் மீண்டும் நடத்தி நம் மரபுக்குப் பெருமை தேடித் தரவேண்டும் என்னும் பொருள் பற்றி ஆராயப் பெற்றது. இது பற்றி நகரத்தார் ஊர்களுக்கும் வெளிநாடுகளுக்கும் எழுதிப் பண உதவியும் கருத்துக்களும் கேட்டு ஆவன செய்வதென முடிவு செய்யப்பெற்றது.

தாங்கள் அன்பு கூர்ந்து தங்கள் ஊரில் நகரக் கூட்டத்தைக் கூட்டி இது பற்றிச் சிந்தித்து நம் பரம்பரைக்குத் தொன்று தொட்டு வழிபடு தெய்வமாயிருந்து வரும் மீனுட்சியம்மன் திருக்கோவில் கும்பாபிடேகத்தை எம் முறையில் மிகச் சிறப்பாக நடத்தலாம் என்பது பற்றிக்கருத்துத் தெரிவிக்க வேண்டுகிறேம்.

எல்லா நகரத்தார்களும் கும்பாபிடேகம் நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்தால் அதற்குப் பொருள் திரட்டத் தனிக்குழு அமைக்க எண்ணியுள்ளோம். அக்குழுவினர் தங்கள் ஊருக்கு வரும்பொழுது பெருத்த நன்கொடைகள் திரட்டிக் கொடுக்குமாறு வேண்டுகிறேம்.

தங்களன்புள்ள,
ஆவி. க. மெ. அரு.
தியாகராசன் செட்டியார்,
பெரி. உடையப்பன்,
செயலர்.

சுப. அ. நடராசன் செட்டியார்,
பொருட்காப்பாளர்.

குறிப்பு: 31—12—62உக்குள் தங்கள் கருத்தைத் தெரிவித்தால் அதன்பின் ஆகவேண்டியவைகளை விரைவில் செய்யத் தோதாயிருக்கும், தங்களுடைய அன்பான பதிலை விரைவில் எதிர்பார்க்கிறேம்.

உ

நகரத்தார் சங்கம்,

NAGARATHAR SANGAM

(Regd. No. 16 of 1956)

நகர விடுதி,
25, வடக்குச் சித்திரை வீதி,
மதுரை 23—3—63

குறிப்பிட்டு என்...............

திரு.

சுற்றறிக்கை.

அன்புடையீர்!

மதுரை மீனாட்சியம்மன் கோவில் குபாபிடேக சம்பந்தமாக ஏற்கனவே தங்களுக்கு நம் சங்கத்தின் மூலமாக அனுப்பிய சுற்றறிக்கையும் கிடைத்திருக்கலாம். நகரத்தார்களுடைய பூரண ஒத்துழைப்பின் பேரில் ஏற்கனவே இரு கும்பாபிடேகங்கள் வெற்றிகரமாகச் செய்ததுபோலத் தற்பொழுதும் நம்மவர் முயற்சியில் செய்ய எண்ணியிருந்தோம். நம் எண்ணத்தை ஈடேற்ச் செய்ய ஆலயத் திருப்பணிக் குழுவினர் நம்மிடம் அப்பொறுப்பைவிட சம்மதிப்பார்களா என ஐயம் தோன்றுகிறபடியால் நாம் அதில் முயற்சி செய்வதில் பலனில்லையென அறிந்து அக்காரியத்தையும் செய்ய இயலாமை குறித்து மிக்க வருந்துகிறோம். ஏற்கனவே அனுப்பிய நம் சங்க வேண்டுகோளின்படி இக்கும்பாபிடேகம் நம்மவர் செய்வதாக இருந்தால் அதற்குப் பூரண ஒத்துழைப்பையும் வேண்டிய பண உதவியும் தாய் நாட்டிலிருந்தும், பிற அந்நிய நாட்டிலிருந்தும் மனமுவந்து தந்துதவுவதாக எழுதிய சிவநேய அன்பர்களுக்கும் ஏனைய நம் நகரத்தார்களுக்கும் இச் சுற்றறிக்கையின்மூலம் ஆழ்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அங்கயற்கண்ணியின் அருள் இருந்தால் நேரமும் காலமும் நமக்கு வாய்க்கும்பொழுது அடுத்த கும்பாபிடேகத்தை எடுத்து நம்மவர் சிறப்புற நடாத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இதன்மூலம் வலியுறுத்தி இச் சுற்றறிக்கையை அனுப்பியுள்ளோம். உங்கள் அன்பிற்கு மீண்டும் எங்கள் நன்றி.

தங்களன்புள்ள,

சுப. அ. நடராசன் செட்டியார்,
பொருட்காப்பாளர்.

ஆவி. சு. மெ. அரு.
தியாகராசன் செட்டியார்,
பெரி. உடையப்பன்
செயலர்.

மீனாட்சி கோயிலில் நகரத்தார் திருப்பணிகள்

மறைக்கப்பட்ட உண்மைகள் நகரத்தார்கள் அறிக்கை

(தமிழ்நாடு 28—6—63)

மதுரை, ஜூன் 27—

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் குடமுழுக்கு விழாவையொட்டி நகரத்தார் சார்பில் கீழ்க்கண்ட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது:—

திருவாலவாய்த் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நிகழ்த்தப் பெறுவது பெரிதும் மகிழ்தற்குரிய செய்தியாகும். இக்குடமுழுக்கு விழாத் தொடர்பாகத் திருப்பணிக் குழுத் தலைவர் திரு. பி. டி. இராசன் அவர்கள் ஆற்றிய உரையில் 'பண்டைக்கால மன்னர்கள் மேற் கொண்ட இத்திருப்பணி வேலைகளைத் தாமும் தம் நண்பர்களும் மேற் கொண்டிருப்பதாக'க் கூறியுள்ளார். (தினமணி 17—6—63) இப் பேச்சு கோயில் திருப்பணி வளர்ச்சிக்கு ஊறுபயப்பதோடு உண்மையை மறைப்பதுமாகும். 85 ஆண்டுகளுக்கு முன்னர் வரை மொட்டைக் கோபுரமாக காட்சியளித்த வடக்குக் கோபுரத்தை முழுக் கோபுரமாக ஆக்கி அழகுப்படுத்திய பெருமை அமராவதிபுதூர் வயிநாகரம் நாகப்பச் செட்டியார் அவர்கள், வேங்கடாசலம் செட்டியார் அவர்கள் குடும்பத் தைச் சார்ந்தது. இக் குடும்பத்தார் சுவாமி கோயில் முதற் பிரகாரம், இரண்டாம் பிரகாரத் தள வரிசைகள், ஆடி வீதித் தளவரிசை, திருக் கல்யாண மண்டபம் முதலான மண்டபங்கள், சுவாமி, அம்மை தங்க விமானம், தங்கம், வெள்ளி வாகனங்கள், திருவாபரணங்கள், அம்மன் தேர் முதலியவற்றைத் தம் குடும்ப நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் வரை செலவு செய்து அமைத்தும் பிறநகரத்தார் மனம் உவந்து அளித்த பொருளைக் கொண்டு வாகனங்கள், திருவாபரணங்கள் முத லியவை செய்வித்தும் ஈசுவர ஆண்டு தை மாதம் 26 ஆம் நாள (6—2—1877) குடமுழுக்கு விழா சிறப்புறச் செய்துள்ளார்கள். ஆனால் 28—5—1963 அன்று மொட்டைக் கோபுரச் சுவரில் பதிக்கப் பெறற கல்வெட்டில் இக் கோபுரத்தை கி. பி. 1564-72 இல் கட்டியவர் கிருஷ்ண விரப்ப நாயக்கர் என்றும் 1963 இல் இதற்குத் திருப்பணி நடைபெற்றது என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. இவ்விரண்டு நிகழ்ச்சி களுக்கும், இடையே நிகழ்ந்த மேலே குறிப்பிடப் பெற்ற 1877 ஆம் ஆண்டைய மொட்டைக்கோபுரப் பூர்த்தி திருப்பணி பற்றிய வரலாறு இக்கல்வெட்டில் மறைக்கப் பெற்றுள்ளமை பெரிதும் வருந்தற்குரியது. நிலைமட்டத்தோடு நின்ற மொட்டைக் கோபுரம் முடிக்கப்பெற்ற இந் நிகழ்ச்சி திருப்பணிக் குழுவினர் வெளியிட்ட 'கோயில்மாநகர்'

என்னும் நூலில் மொட்டைக்கோபுரம் பழுதுபார்க்கப்பட்டு (பக்கம் 219) சாந்திஞல் பூசி முடிக்கப்பட்டது. (பக்கம் 184) என்று சாதாரண முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது இம்மாபெரும் வரலாற்று நிகழ்ச்சி புறக்கணிப்பான முறையில் இந்நூலில் இடம் பெற்றிருப்பது உண்மையை மறைப்பதாகும். திருபபணிக் குழுவினரே வெளியிட்ட கல்வெட்டும், நூலும் இப்படி ஒன்றுக்கொன்று முரண்பட்ட முறையில் மொட்டைகோபுரம் பற்றிய செய்தியைக் கூறியிருப்பது நகைப்பிற்கு உரியதாகும்.

1963 இல் இக்கோபுரத்திற்கு வர்ணம் பூசியதைத் 'திருப்பணி' என்று குறிப்பிட்டிருப்பது பொருந்தாததாகும்.

மேலும் தேவகோட்டை முத்து கரு. வெ. அழகப்ப செட்டியார் ஊதியம் பெறுது தேவத்தான ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது சுவாமி அம்மைக்குத் தங்கத்தால் ஜடிபந்தனம் செய்து கோயிலில் அப்போதிருந்த சில சிறிய பழுதுகளைச் செம்மை செய்து, நகரத்தார்களின் பொருளுதவியைக் கொண்டும், தம் சொந்தப் பொருளைக் கொண்டும் சுமார் 3 இலட்சம் ரூபாய்வரை செலவு செய்து, ருத்ரோக்காரி ஆண்டு ஆனித்திங்கள் 17 ஆம் நாள் (1—7—1923) சிவாகமத் துறையிலும், உலகியல் துறையிலும்யாவரும் வியக்கும் வண்ணம் மிகச் சிறப்புற குடமுழுக்குச் செய்து முடித்தனர். அப்பொழுது மீனுட்சியம்மைக்குத் தமது உபயமாக வைரக்கற்கள் பதித்த திருமாங்கல்யம் ஒன்று செய்து அணிவித்திருக்கிருர்கள்.

கீழப்பூங்குடி கூ. க. அரு. குடும்பத்தார் தொட்டு பசுமடம் வைத்து அபிடேகத்திற்கும் பால் வழங்கி வருகிருர்கள். 'கோயில் மாநகர்' என்னும் நூலின் 219 ஆம் பக்கத்தில் 1877 ஆம் வருடத்திய கும்பாபிடேகத்தின் நினைவாக நகரத்தார்களால் செய்து வைக்கப்பெற்ற 2 தங்கக் குடங்கள் பழுதுபட்ட நிலையில் இருந்தபடியால் 1963-இல் கோயிலார் அவற்றின் எடையை மேலும் கூட்டிப் புதிதாகச் செய்துள்ளனர் என்று காணப்பெறுகிறது. இக்குடங்கள் இரண்டையும் ஏறத்தாழ நான்கு மாதங்களுக்கு முன்பு கோயிலார் தேசியப் பாதுகாப்பு நிதிக்கு அமைச்சரிடம் வழங்கியதை மக்கள் நேரில் அறிவர். செய்தித் தாள்களும் அப்போது இச்செய்தியை வெளியிட்டன. இப்படியிருக்க நூலில் உண்மைக்கு மாருன செயதி வெளியாகியிருப்பது வருந்தற்குரியது.

மேலும் தங்கக்கட்டுப்பாட்டுச் சட்டம் இல்லாத 1877-இல் சுத்தத் தங்கத்தில் செய்யப்பெற்ற குடங்கள் இச்சட்டம் வந்த 1963 இல் புதுப்பிக்கப் பெற்றிருக்குமானுல் எவ்வாறு சட்டத்திற்குட்பட்டுச் செய்திருக்க முடியும் என்பதை மக்கள் கவனத்திற்கு விடுகிரோம்.

கோயிலுக்கு நகரத்தார் ஆற்றிய திருப்பணிகளுக்குக் கோயில் தேவத்தானச் சான்றேடுகளும், மகாவித்துவசிரோமணியும், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவருமான காலஞ்சென்ற வயிநாகரம் அ. இராமநாதன் செட்டியார் அவர்கள் பல சமயங்களில் இயற்றிய செய்யுட்களும், காரைக்குடி சைவ சித்தாந்தச் செல்வர் சொக்கலிங்கையா

அவர்கள் இயற்றிய மெய்யப்ப சுவாமிகள் சரித்திரமும், வேம்பத்தூர் சிலேடைப்புலி பிச்சுவையர் பாடிய பாடல்களும் இவை போன்ற பிறவும் அகச்சான்ருய் உள்ளன. இப்பேருண்மைகள் திருப்பணிக் குழுவினரால் மக்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பெருமல் மறைக்கப் பெற்றிருப்பது பெரிதும் மறுப்புக்குரியதாகும், மேலும் இச் செயல் தூய இறைபணியோடு முரண்பட்டதுமாகும்.

மேற்கண்ட செய்திகளின் விளக்கமான விவரங்களும் நகரத்தார் களில் துறவிகளாயிருந்த மெய்யப்ப சுவாமிகள், குட்டைய சுவாமிகள் முதலியோர் செய்த திருப்பணி பற்றிய செய்திகளும் தனியாக நூல் வடிவிலும் அறிக்கைகள் வாயிலாகவும் அவ்வப்போது வெளியிடப் பெறும்.

மீனுட்சி கோயில் குடமுழுக்கு

நகரத்தார் அறிக்கைக்குத் திருப்பணிக் குழு உறுப்பினர் மறுப்பு

(தமிழ்நாடு 7—7—63)

மதுரை, ஜூலை 6—மதுரை ஸ்ரீ மீனுட்சி சுந்தரேசர் கோயில் திருப் பணிக் குழு உறுப்பினர் திரு வி. பழனியப்பன் நகரத்தார் சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கைக்குக் கீழ்க்கண்ட மறுப்பு அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

"மீனுட்சி கோயிலில் நகரத்தார் திருப்பணிகள்; மறைக்கப்பட்ட உண்மைகள்" என்ற தலைப்பில் 28—6—63 ஆம் நாள் "தமிழ்நாடு" இத ழில் நகரத்தார் சார்பில் ஒரு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்டுள்ள கருத்துக்கள் வாதத்துக்குரியனவாக இருப்பதால் திருப்பணிக் குழு உறுப்பினர்களில் ஒருவன் என்ற முறையிலும் கோயில் மாநகர் என்ற நூலின் ஆசிரியர் என்ற முறையிலும் விளக்கம் கொடுப்பது எனது கடமையாகும்.

நகரத்தார் செய்த திருப்பணிகளையும் கும்பாபிடேகங்களையும் மறைக்க வேண்டுமென்ற எண்ணம் எந்தச் சமயத்திலும் திருப்பணிக் குழுவினருக்கு இருந்தது கிடையாது.

அறிக்கை விட்டவர்களின் முக்கியமான குற்றச் சாட்டு 1877 ஆம் ஆண்டில் வயிநாகரம் செட்டியார்கள் செய்த திருப்பணிகள் மறைக் கப்பட்டுள்ளன என்பதே யாகும் திருப்பணிக் குழுவினரால் வெளியி டப்பட்டுள்ள கும்பாபிடேக மலரில் 87 ஆம் பக்கத்தைப் பார்த்தால் உண்மை விளங்கும். அதில் மேற்படி திருப்பணிகளைச் செய்த வயிநா கரம் நாகப்பச் செட்டியார் அவர்களின் பேரரும் இன்றைய வாரிசு

மான பாலகவி வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் "மதுரைக் கோயிலில் வயிநாகரம் திருப்பணி" என்ற தலைப்பில் எழுதிய ஒரு கட்டுரை வெளியிடப் பெற்றுள்ளது.

அதே மலரில் 82ஆம் பக்கத்தில் "ஸ்ரீ மெய்யப்ப சுவாமிகள்" என்ற தலைப்பில் மற்றொரு கட்டுரையை வெளியிட்டுள்ளோம் இதுவும் நகரத்தார் செய்த திருப்பணிகளைக் குறிப்பதாகும். இக்கட்டுரை 1890-இல் பிரபல சைவ சித்தாந்தியாய் விளங்கிய ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார் அவர்களால் எழுதப்பெற்று ஒரு சிறு நூல் வடிவத்தில் வெளி வந்ததாகும்.

கும்பாபிடேகத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பே 26—4—63 ஆம் தேதி வயிநாகரம் பாலகவி அவர்களுக்கு நான் ஒரு கடிதம் எழுதினேன். அதில் அவர்களுடைய குடும்பத்தார் செய்த திருப்பணி விவரங்களை எழுதியனுப்பினால் நான் எழுதும் வரலாற்று நூலுக்கு உதவியாக இருக்குமென்று குறிப்பிட்டிருந்தேன். அவர்கள் அடிக்கடி வெளியூர் சென்று சைவப் பணியாற்ற வேண்டியிருந்தபடியால் 17—5—63ல் தான் கட்டுரை எழுதியனுப்ப முடிந்தது. அதற்குள் கோயில் மாநகர் என்ற நூலின் அச்சு வேலை முடிந்து விட்டது. எனினும் அக்கட்டுரையைப் புறக்கணிக்காது கும்பாபிடேக மலரின் ஆசிரியர் குழுவில் ஒருவன் என்ற முறையில் அதை மலரில் வெளியிடச் செய்தேன்.

"கோயில் மாநகர்" என்ற நூலில் 219ஆம் பக்கத்தில் "மொட்டைக் கோபுரம் பழுது பார்க்கப்பட்டு சாந்தினால் பூசி முடிக்கப்பட்டது என்று சாதாரண முறையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மா பெரும் வரலாற்று நிகழ்ச்சி புறக்கணிப்பான முறையில் இந்நூலில் இடம் பெற்றிருப்பது உண்மையைமறைப்பதாகும்" என்று நகரத்தார் அறிக்கை கூறுகின்றது. புத்தகத்தில் பாலகவி அவர்கள் எழுதிய விவரம் வெளிவர இயலாததற்குக் காரணம் முன்னரே கூறியுள்ளேன். தக்கவர்களிடமிருந்து விவரம் கிடைக்காத காரணத்தால் கிடைத்த சான்றுகளைக் கொண்டே எழுதப் பெற்றது மொட்டைக் கோபுரம் பழுதுபார்க்கப்பெற்று சாந்தினால் பூசப்பெற்றது என்று குறிப்பிட்டதற்குச் சான்று சென்னை அரசினர் 1906ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ள Madura gazetteer என்ற நூலேயாகும். அந்த நூலின் (vol I) 268ஆம் பக்கத்தில் கீழ்க்கண்ட வாசகம் ஆங்கிலத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

"வடக்குக் கோபுரம் செங்கல், கருங்கல் கட்டிட மாடிகளை உடையதாக மட்டும் இருந்து வந்தபடியால் அதற்கு மொட்டைக் கோபுரம் என்று பெயர் வரலாயிற்று. அண்மையில் முடிவுபெறாத கட்டிடத்தை முடித்தால் தீமை விளையும் என்ற மூட நம்பிக்கையைப் புறக்கணித்து, ஊக்கமுடைய ஒரு செட்டியார் அதன்மேல் வழக்கமான சாந்தைப் பூசினார்."

1906ஆம் ஆண்டில் அரசினர் வெளியிட்ட இச்செய்தியை இதுவரை எந்த நகரத்தாரும் மறுத்து அறிக்கை வெளியிட்டதாகத் தெரியவில்லை.

நகரத்தார் அறிக்கையில் தங்கக் குடங்களைப் பற்றிய செய்தியும் உண்மையன்று. சாதாரணமாக 80 ஆண்டுகள் பயன்படுத்திய பாத்திரங்கள் எப்படி இருக்குமென்று யூகித்துக் கொள்ளலாம். 1877இல் ஏழு கோயில் நகரத்தார் கொடுத்த தங்கக் குடங்கள் நெழிந்து ஓட்டையாகிப் பொலிவு இழந்து இருந்தன. இந்த உண்மையைக் குடங்களை நேரில் பார்த்தோர் அறிவர். அக்குடத்திற்குப் பதிலாகப் புதிய குடங்கள் செய்ய வேண்டுமென்று கோவிலார் முடிவு செய்த பொழுது அக்குடங்களில் செதுக்கப் பெற்றுள்ள எழுத்துக்களையே புதிய குடங்களிலும் செதுக்க வேண்டுமென்று முடிவு செய்தனர். அவ்வாறே செய்யும் பொழுது பழைய குடங்களைவிட அதிகமான எடையுள்ளதாகச் செய்தது குறிப்பிடத்தக்கதாகும். இவை தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் வருவதற்கு முன் செய்யப்பட்டனவாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக குடியரசுத் தலைவர் டாக்டர் இராதா கிருஷ்ணன் அவர்கள் கும்பாபிடேகத்திற்கு வரும்பொழுது அவருக்குச் திருப்பணிக்குழுவின் சார்பாகப் படித்துக்கொடுக்க இருந்த வரவேற்பு இதழின் பிரதி ஒன்று அரசினருக்கு அனுப்பப்பட்டது குடியரசுத் தலைவர் வராததால் அவ்வரவேற்பிதழ் வெளியிடப் பெறவில்லை. அவ்விதழில் 1877இலும் 1923இலும் நகரத்தார் செய்த திருப்பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இவையனைத்தும் நகரத்தார் செய்த திருப்பணிகளை மறைப்பதற்காகச் செய்யப்பட்டதாகுமா?

மேலும் வடக்குக் கோபுரத்திற்குச் சாயம் பூசப்பட்டது திருப்பணியாகுமா? என்று நகரத்தார் அறிக்கை கேட்கின்றது மதுரை மக்கள் அனைவரும் ஆறு மாதங்களாக வடக்குக் கோபுரத்தில் திருப்பணி வேலை எப்படி நடைபெற்றது என்பதை அறிவர்.

வடக்குக் கோபுரத்திற்கு மட்டும் புதுமுறையாகக் கல்வெட்டு அமைக்கப்படவில்லை. எல்லாக் கோபுரங்களுக்கும் கல்வெட்டு அமைக்க ஒரே முறைதான் பின்பற்றப் பெற்றது. கோபுரத்தின் வயதைக்காட்டுவதற்காக ஆதியில் கோபுரம் கட்டியவரின் பெயரும் 1963இல் நடைபெற்ற அக்கோபுரத் திருப்பணிக்குச் செலவான தொகையும் அதை நன்கொடையாகக் கொடுத்தவர்களின் பெயரும் கோபுரத்தின் உயரம் முதலியனவுமே கல்வெட்டுக்களில் வெட்டப் பெற்றுள்ளன.

(ஆசிரியர் குறிப்பு:— இந்த மறுப்பு அறிக்கைக்கு மறுப்பு ஏற்கனவே சில செய்தி இதழ்களில் வெளியாகியுள்ளது. 'கோயில் மாநகர்'' நூலிலும் வடக்குக் கோபுரத்தில் பதித்த கல்வெட்டிலும் நகராத்தார் திருப்பணிகள் இடம் பெறாததால் இக்கருத்து வேறுபாடு தோன்றியது. இது வருந்தற்பாலதாகும்.)

—தமிழ்நாடு, 7—7—63.

மதுரை மீனுட்சி கோவில்

குடமுழுக்கு

பாலகவி இராமநாதன் செட்டியார் விளக்கம்.

(தமிழ்நாடு 15—7—63)

மதுரை, ஜுலை. 14—

மதுரை மீனுட்சி அம்மன்கோவில் குடமுழுக்கு குறித்துப் பாலகவி வயிநாகரம் திரு. வே. இராமநாதன் செட்டியார் தெரிவிப்பதாவது:-

மீனுட்சி அம்மன் கோயிலில் நகரத்தார்கள் செய்த திருப்பணிகள் திருப்பணிக் குழுவினரால் மறைக்கப்பட்டு விட்டன என்று நகரத்தார்கள் தெரிவித்திருந்ததற்கு, அக் குழுவின் உறுப்பினர் திரு. கி. பழனியப்பன் மறுப்பு அறிக்கை வெளியிட்டிருக்கிருர். கோவில் மாநகர் என்ற நூலிலும் திருப்பணிக் குழுவின் அறிக்கைகளிலும் கோவிலில் பதித்திருக்கும் கல்வெட்டுக்களிலும் திருப்பணிக் குழுத் தலைவர் திரு பி. டி. இராசனின் பேச்சுக்களிலும் என் குடும்பத்தாராலும் நகரத்தார்களாலும் பல இலட்ச ரூபாய் செலவில் செய்யப்பெற்ற திருப்பணிகள் சரிவரக் காட்டப்படாமலும் அறவே காட்டப்படாமலும் உள்ளன என்பதே நகரத்தார் குற்றச்சாட்டு. இதற்கு மறுப்பு அறிக்கையில் பதில் இல்லை.

26—4—63 இல் திரு கி. பழனியப்பன் எனக்குக் கடிதம் எழுதியது உண்மை. ஆனுல் தாம் ஒரு நூல் எழுதுவதாகவோ அதில் சேர்ப்பதற்கு எங்கள் குடும்பத் திருப்பணி விவரங்கள் வேண்டுமென்ருே அக் கடிதத்தில் குறிப்பிடவே இல்லை குடமுழுக்கு விழா மலரில் வெளியிடுவதற்கென ஒரு கட்டுரை வேண்டுமென்று மட்டும்தான் கேட்டிருந்தார். "கோயில் மாநகர்" என்னும் நூல் முழுமையும் ஆசிரியரின் உரையே அன்றி வேறு எவருடைய கட்டுரையையும் உடையதன்று என்பதும் குடமுழுக்கு விழா மலரே பலருடைய கட்டுரைகளை உடையது என்பதும் பொதுமக்களுக்கு நன்கு தெரியும். உண்மை இவ்வாறிருக்க. "கோயில் மாநகர்" நூலுக்கு என் கட்டுரை கேட்டதாக அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதும் ஒரு சிறிதும் உண்மையன்று. கட்டுரை அனுப்புவதாய் 5—5—63 இல் நான் கடிதம் எழுதியபிறகு, என் கட்டுரை கிடைத்த 17—5—63-க்குள் மீண்டும் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருப்பதாய்க் குறிப்பிட்டிருப்பது உண்மையன்று என்பது கடிதத் தேதி குறிப்பிடப்படாமையாலேயே விளங்கும். மேலும் அவ்வாறு கடிதம் எழுதியிருப்பராயின், அதற்கு என் பதில் வருமுன் ஏன் அவசரப்பட்டு இடைப்பட்ட 12 நாட்களுக்குள் நூலை முடிக்க வேண்டும்?

17—5—63 இல் என் கட்டுரை கிடைத்த பின்னரும் "நாயக்க மன்னர்களுக்குப் பிறகு இக் கோயில் திருப்பணி செய்யப்படாத நிலையில் இருந்தது" என்று திருப்பணிக் குழுவினர் 29—5—63 இல் "தினமணியில்" அறிக்கை வெளியிட்டுள்ளனர். இந்த அறிக்கைக்கு நான் 9—6—63 "தினமணியில்" மறுப்பு எழுதினேன். அதில் நாயக்க மன்னர்களுக்குப் பிறகு எங்கள் பாட்டனார் செய்த திருப்பணிகளைக் குறிப்பிட்டிருக்கிறேன். இதன் பின்னரும் எங்கள் திருப்பணிகளை மறைக்கும் முயற்சி பல தடவைகளில் நடந்து வந்திருக்கிறது.

திருஞானசம்பந்தமூர்த்தி மடாலய குருபூசைக்கு நான் வந்திருந்தபோது திருப்பணிக்குழு அலுவலகத்தில் போய் திரு. வி. பனியப்பனைச் சந்தித்து, திருப்பணிக் குழுவின் தவறான அறிக்கைகளைப்பற்றி தெரிவித்தேன். அவர் வந்து என்னைச் சந்தித்ததாகவும், என் கட்டுரை அவர் புத்தகத்துக்குப் பயன்பட வில்லை என்று சொன்னதாகவும் அறிவித்திருப்பதும் ஒருசிறிதும் உண்மையில்லை.

1906 ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் வெளியிட்டுள்ள மதுரை 'கெஜட்டியரில்' வெளியான பகுதியை அறிக்கையாளர் ஆங்கிலத்திலிருந்து தமிழில் தந்திருப்பது சொல்லுக்குச் சொல் சரியாக மொழி பெயர்க்கப்படவில்லை. அதன் சரியான தமிழாக்கம் பின்வருமாறு:-

வடக்குக் கோபுரம், செங்கல் கருங்கல் மாடிகளுடையதாக மட்டும் இருந்தது. அதனால், அது மொட்டை (அதாவது வழுக்கைத் தலை) கோபுரம் என்று அதற்குப் பெயர் ஏற்பட்டது. முடிவு பெறாமல் உள்ள இப்படிப்பட்ட கட்டிடத்தைக் கட்டி முடிப்பது மிகப் பெரிய துர்ப்பாக்கியமானது என்ற மூட நம்பிக்கையைச் சிறிதும் பொருட்படுத்தாமல் துணிச்சல் மிகுந்த ஒரு செட்டியார் அண்மையில் அதன்மீது சாந்து பூசினார் என்பதாகும். இதை ஜே. பி. எல் ஷெனாய் தம் நூலில் சிகரமில்லாத கோபுரம் (பீக்லெஸ் டவர்) என்று விளக்கமாக விவரித்துள்ளார். இதிலிருந்து மொட்டைக்கோபுரம் முன்னர் சில நிலைகள் மட்டும் உடையதாக இருந்தது என்பதும் நன்கு அறிந்து கொள்ளலாம். கோபுர வேலை முழுதும் முடிந்தது என்பதை குறிப்பிட "சாந்து பூசினார்" என்று 'கெஜட்டியர்' குறிப்பிடுவதோடு முடிவு பெறாத கட்டிடத்தை முடித்தார் என்பதையும் அது சுட்டிக்காட்டுகிறது. அறிக்கையாளர் எடுத்துக் காட்டிய சான்றே அவருக்கு முரணாக இருக்கிறது.

நகரத்தார் வழங்கிய தங்கக் குடங்களைப் பாதுகாப்பு நிதிக்குக் கொடுத்து விட்டார்கள் என்று நகரத்தார் அறிக்கை கூறுகிறது. அதைப்பற்றி மறுப்பு அறிக்கை ஒன்றும் கூறாமல் புதுக்குடம் செய்தது பற்றிய கதைகள் அளக்கப்பட்டிருக்கின்றன.

கோவில் திருப்பணி செய்வதில் மன்னர்களுக்குப் பிறகு நாட்டுக்கோட்டை நகரத்தார்களே முன்னணியில் நின்று வருகின்றனர் என்பதும், அவர்கள் சொந்த இலாபம் ஒரு சிறிதும் கருதாது சிவ புண்ணியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு திருப்பணிகளைச் செய்து வருகிறார்கள் என்பதும் அந்த அனுபவத்தால் பிறர் எப்போ

தாவது செய்து வரும் திருப்பணிகளைப் பற்றிய செலவுகளை மதித்துக் கணக்கெடுப்பதில் வல்லவர்கள் என்பதும் நாடாறிந்ததாகும். இந்த நிலையில் இப்போதைய திருப்பணிக் குழுவின் வேலைகள் நகரத்தார் களால் மட்டுமல்லாமல் பொது மக்களாலும அளந்து காணப்பெற்று விட்டன என்பதை அறிக்கையாளர்களுக்கு, நட்புரிமைபற்றியான் தெரிவிக்கவேண்டுகிறேன்.

கல் வெட்டுக்களில் ஆதியில் கோபுரம் கட்டியவர் பெயரையும் இப்போது அதைச் செப்பனிடுவதற்கு நன்கொடை கொடுத்தவர் பெயரையும் மட்டுமே குறிப்பிட்டிருப்பதாக அறிக்கையாளர் சொல்லு கிறார். இடைப்பட்ட நிகழ்ச்சியான. ''திருப்பணிக் கால்கோள் விழா'' பற்றித் தெற்குக் கோபுரக்குட வரையில் கல் வெட்டுப் போட்டி ருப்பது அறிக்கையாளருக்குத் தெரியாதா? கால்கோள் விழாவைப் பற்றிக் கல்வெட்டு அமைத்த திருப்பணிக் குழு, பல இலட்சம் செலவில் இடைக்காலத்தில் நடந்த திருப்பணியை ஏன் மறைக்க வேண்டும்?

குட முழுக்கு விழா மலர் தொகுப்பாசிரியர் திரு. கு. அருணாசலக் கவுண்டர் அம்மலரில் சேர்ப்பதற்காக என்னிடம் கேட்டு வாங்கிய நாகப்பய்யா, வேங்கடாசல ஐயா படங்களையும், மெய்யப்ப சுவாமி படத்தையும் மலரில் வெளியிடாது விட்டு விட்டார்கள். 29-6-63இல் முதல் தடவையாக மலர் என்னிடம் காட்டப்பட்டபோது எங்கள் முன்னோர்களின் படங்களை 6-6-63-இல் நேரில் நான் கொண்டு வந்து கொடுத்திருந்துங் கூட ஏன் வெளியிடவில்லை என்று தொகுப்பாசிரி யரைக்கேட்டேன் 'பிளாக்' செய்துவருவதற்குத் தாமதமாகி விட்டது என்று சமாதானம் சொன்னார்கள். 22-6-63-இல் எழுதப்பட்ட பல வாழ்த்துச் செய்திகள் கூட மலரில் இடம் பெற்றிருக்கும் போது 6-6-63-இல் கொடுத்த படம் மலரில் சேர்க்கமுடியாது போயிற்று என்று சொல்வது நகரத்தார் பணியை மனங் கொண்டு வெளிப் படுத்த விரும்பாமைக்கு ஒரு சான்று என்றே நான் கருதுகிறேன்.

தமிழ்நாடு 15—7—63

மதுரைக் கோயிலும் நகரத்தாரும்

ராய. சொ.

(தமிழ்நாடு 18—8—63)

மதுரைக் கும்பாபிடேக மலருக்கு வாழ்த்துரையை விரும்பி அம்மலர் வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருந்த எனது மிகப் பழைய நண்பர், தமிழ்ப் பேராசிரியர் கு. அருணசலனர் 8—6—63இல் மதுரையினின்றும் எனக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் விடுத்தார். அக்கடிதம் பின்வருமாறு:

'அன்பார்ந்த ஐயா அவர்களுக்கு அருணசலன் வணக்கம்.

மதுரைக் கும்பாபிடேகச் சிறப்பு மலருக்குத் தங்கள் வாழ்த்துரையை வேண்டி இவ்வேண்டுகோள். இதை ஏற்றருளி, மலர்மூலம் தமிழ் மக்களுக்குத் தாங்கள் வழங்க விரும்பும் உபதேசங்களையும் வாழ்த்துரையையும் எழுதி அனுப்ப வேண்டுறேன்.'

அவர் விருப்பத்தை மதித்து 'மதுரை கோயிலும் நகரத்தாரும்' என்ற தலைப்பில் மதுரைக் கோயிலைப் பற்றி இலக்கியங்களில் நான் கண்ட நயத்தைச் சிறிது விரித்து அக்கோயிலுக்கு நகரத்தார் செய்த பெரும் பணியை ஓரளவு பாராட்டி வாழ்த்தி அருணசலனர் விருப்பப்படி மதுரைக் கோயிலுக்குத் தொன்றுதொட்டு அண்மையில் பழுது பார்த்து கும்பாபிடேகம் செய்த குழுவினர் உள்ளிட்ட எல்லோரையும் வாழ்த்தி ஓர் கட்டுரை அனுப்பினேன். கும்பாபிடேக மலரில் என் கட்டுரையின் தலைப்பை மாற்றியும், நகரத்தார் பணியைப் பாராட்டிய பிற்பகுதியை விட்டு விட்டும், என் கட்டுரை வெளியிடப் பெற்றிருந்ததை 30—7—63இல் பார்த்தேன். அம்மலர் நான் கடிதம் எழுதிய பிறகு 30—7—63இல் தான் எனக்குக் கிடைத்தது. 28—6—63 கும்பாபிடேகத்தன்று மலர் விற்கப்பட்டதாக அறிகிறேன். மலர் எனக்குக் கிடைத்தவுடன் என் கட்டுரையைப் பற்றி எனது நண்பர் அருணசலனருக்கு 31—7—63இல் பின் கண்டவாறு கடிதம் எழுதினேன்:

'அன்புடையீர் வணக்கம்.

மலையைக் கல்லி எலியைப் பிடித்த மாதிரி மதுரைக் கும்பாபிடேக மலர் பெரு முயற்சியால் நேற்றுக் கிடைத்தது. தாங்கள் எழுதவில்லையானல் நான் மலருக்கு எழுதப்போவதில்லை. எழுதுகின்றவர் தரம் பலருக்குத் தெரிவதில்லை என் கட்டுரையின் பிற்பகுதி நீக்கப் பெற்றமைக்கும் கட்டுரைத் தலைப்பு மாற்றப் பட்டமைக்கும் காரணம் அறிய விரும்புகிறேன். நகரத்தார் என்ற பெயரைக் கேட்டவுடன் கும்பாபிடேகக் குழு ஏன் அஞ்சுகிறது? பாலகவி கட்டுரையிலும் சொக்கலிங்க ஐயா கட்டுரையிலும் இவ்விசயம் இருப்பதால் நீக்கப்பெற்றது என நீங்கள் சொன்னல் அது சமாதானமாகாது. ஸ்ரீமான் பி. டி. இராசன் பெயர், அம்மலரில் கணக்கற்ற இடங்களில் காணப்படுகின்றனவே. மதுரைக் கோயிலுக்கு நகரத்தார் செய்த பணியில் எத்துணையில் ஒரு பங்கு இராசன் அவர்கள் செய்தது என்பதை மதுரை மீனுட்சி

அறிவாள். காற்கோடி செலவிட்டோரைப் பாராட்டக் கூசும் வாய் வாயாகுமா? விடையை எதிர்பார்க்கிறேன். — ராய. சோ.

அதற்கு இன்றுவரை விடைக் கிடைக்கவில்லை. மலருக்கு என்னால் எழுதப்பெற்று வெளியிடப்படாத பகுதியைக் கீழே தருகின்றேன்.

"இத்துணைச் சிறப்பு வாய்ந்த மதுரைக் கோயில், பெரும் பொருட் செலவில் பழுது பார்க்கும் திருப்பணி செய்யப்பெற்று கும்பாபிடேகம் நடைபெறுகின்றது. இப்பெரும் கோயிலுக்கு நகரத்தார் செய்த திருப்பணி பல. அமராவதிபுதூர் வைநாகரம் குடும்பத்தார் கோயிலின் வட புறத்தேயுள்ள மொட்டைக் கோபுரம் என்ற பெயருடைய கோபுரத்தை முழுக் கோபுரமாக்கி ஏனைய கோபுரங்களோடு ஒப்ப வானத்தை எட்டிப் பிடிப்பது போல் நிமிர்ந்து நிற்கச் செய்தார்கள்; கோயிலின் பெரிய பிரகாரமாகிய ஆடி வீதி முழுவதும் கருங்கல் பரப்பினார்கள்; அழகிய திருக்கலியாண மண்டபத்தைக் கட்டினார்கள். பெரு முயற்சி எடுத்துக் கோவில் மதிலைச் சுற்றி இருந்த வீடுகளை யெல்லாம் அப்புறப்படுத்தி பிரகாரம் முழுவதும் இரும்பு வேலி எழுப்பி அழகுப்படுத்தினார்கள். இத்தகைய திருப்பணிக்கு அந்நாளில் அவர்கள் செலவிட்ட பணம் இருபத்தைந்து இலட்ச ரூபாய். இதனை,

'அஞ்சாதபுகழ் மதுரை மீனாட்சி
இறைசோம சுந்த ரேசர்க்கு
எஞ்சாத திருப்பணியைக் காற்கோடி
பொருட் செலவால் இயற்றியுள்ளோம்'

என்று,

'பிடமொன்றும் அரவசைத்த பரமர்திருக்
கோயிலெல்லாம் பணிசெய்கின்ற
இடமொன்றும் நகரத்தார்'.

எனப் பாராட்டப்பெற்ற நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் வயிநாகரம் குடும்பத்தில் தோன்றிய பெரும் புலவர் அ. இராமநாதன் செட்டியார் பாடி மகிழ்ந்தார்கள்.

'இன்னபெருஞ்சிறப்பு வாய்ந்த மதுரைக் கோயிலைத் தொன்று தொட்டுத் திருப்பணி செய்து உயர்ந்த பெரியார்களும், இன்று இக் கோயிலைத் திறம்படப் பழுது பார்த்துப் புதுக்கிப் பணி செய்த அறவோர்களும், மீனாட்சி சுந்தரேசுவரர் திருவருளால் எல்லா நலனும் பெற்றுப் பல்லாண்டு பல்லாண்டு வாழ்வாராக.'

மேலே கண்டவை நீக்கப்பெற்ற பகுதி.

இதைப்பற்றி நான் விளக்கம் சொல்ல வேண்டியதில்லை. கும்பாபிடேகக் குழு பெரும் பொருட் செலவில் நகரத்தார் மதுரையில் செய்த திருப்பணியை இயன்றவரை மறைக்க எண்ணுகின்றதா, இல்லையாஎன்பதை இதுபற்றிய நிகழ்ச்சிகளை ஆராயும் மக்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறேன்.

'தமிழ்நாடு' 18—8—63

உ

நகரத்தார்கள்

'நகர விடுதி'

25, வடக்குச் சித்திரை வீதி,

மதுரை - 1.

அன்புடையீர்! 10—8—63

நலம்.

மதுரை ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவில் திருப்பணிக் குழுவினர் சென்ற 28—6—6.ல் நடத்திய கும்பாபிஷேக விழாவை ஒட்டி வெளியிட்ட வரலாற்று நூலிலும் கோயிலில் புதிதாகப் பதித்த கல்வெட்டுக்களிலும் நமது நகரத்தார்கள் செய்ததும் செய்து வருகின்றதுமான திருப்பணிகள் கட்டளைகளை வேண்டுமென்றே மறைத்திருக்கிறார்கள் என்பதுபற்றிச் செய்தித்தாள்களில் வெளியிடப்பெற்ற அறிக்கைகளைத் தாங்கள் பார்த்திருப்பீர்கள் என எண்ணுகிறோம்.

வயிநாகரம் குடும்பத்தார் செய்துமுடித்த மொட்டைக்கோபுரத் திருப்பணியும். திருக்கல்யாண மண்டபத் திருப்பணியும் வரலாற்றுச் சிறப்புடையவை, மற்றும் 110 ஆண்டு கட்கு முன்பே அக் குடும்பத்தினர் தமது சொந்தப் பொருளில் 25 லட்சம் ரூபாய் வரை சிலவு செய்து மதுரைக் கோயில் முழுவதையும் செப்பனிட்டிருக்கிறார்கள். அவர்களால் கட்டப்பெற்ற திருக்கல்யாண மண்டபத்தின் மேற்கூரை செப்போடுகள் திருப்பணிக் குழுவினரால் பிரித்து விற்கப்பட்டு விட்டன. மேற்கூறைப் பலகைகள் வெயிலிலும், மழையிலும், விரைவில் வீணாக்கத் தக்க நிலையை அடைந்து வருகிறது.

இத்தனை அறிக்கைகளுக்குப்பிறகும் கூட நகரத்தார்கள் கொடுத்த தங்கக் குடங்களைத் தற்காப்பு நிதிக்குக் கொடுத்த உண்மை திருப்பணி குழுவினரால் ஒப்புக்கொள்ளப் பெறவில்லை.

அதனால் சென்ற 15—7—63ல் மதுரையில் உள்ள நகரத்தார்கள் 121 பேர் கையெழுத்திட்டு, மேற்கண்ட விஷயங்களுக்கு விரைவில் பரிகாரம் தர வேண்டுமென்று கனம் சென்னை அரசாங்க முதல் அமைச்சருக்கும், சென்னை அறநிலையப் பாதுகாப்புத் துறை ஆணையருக்கும் தமிழில் இரண்டு மகஜர்கள் அனுப்பியுள்ளோம். அந்த மகஜருக்குச் சரியான ஆங்கில மொழி பெயர்ப்பும் கனம் ஜனாதிபதி அவர்களுக்கு அனுப்பப்பெற்றிருக்கிறது.

தாங்கள் அவ்விடத்தில் உடனடியாக நகரக்கூட்டம் கூட்டி இது விஷயமாகத் தீர்மானம் போட்டுச் சென்னை மாநில முதல் அமைச்சர், சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையர் ஆகிய இருவருக்கும் அத்தீர்மான நகல்களையும், தீர்மானத்துக்கு ஆங்கில மொழி பெயர்ப்பைக் கனம் ஜனாதிபதி அவர்களுக்கும் பதிவு அஞ்சலில் அனுப்பி, அவைகளின் நகல்களையும் இவ்விடத்துக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

நகரத்தார்களுக்காக

குறிப்பு.— "தொன்று தொட்டுத் திருப்பணிகளையே செய்து வருகின்ற நமது நகரத்தார்களின் அறங்களை மறைக்கமுற்பட்டிருக்கும் இந்த முதல் முயற்சியில் நாம் உறுதியோடு, உண்மையை நிலைநாட்டினால்தான், மற்ற திருத்தலங்களில் நகரத்தார்கள் செய்த திருப்பணிகள் மறையாமல் நிலைபெறும்"

விபரம் தெரிந்து கொள்ளுங்கள்

நம் சமூகத்தினரில் பொறியியலராயிருப்பவர்களின் விபரம்

	பெயர்	சொந்த ஊர்	பணிபுரியும் இடம்
1	N. கருப்பஞ் செட்டி B.E. (Mech)	கீழப்பூங்குடி	நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன்
2	VR. சேதுராமன் B.E, (Mech)	பலவான்குடி	,,
3	M தேனப்பன் B. E. (Chem)	கண்டனூர்	,,
4	S இராமையா B. E. (Chem)	அரிமளம்	,,
5	S முத்து செல்லப்பன் B. E. (Mech)	,,	,,
6	AR. திருநாவுக்கரசு B. E.	பள்ளத்தூர்	,,
7	CT. முத்து விரப்பன் B. E. (Ele)	,,	,,
8	S. S. லக்ஷ்மணன் B. E. (Mech)	,,	,,
9	K. நாச்சியப்பன் B. E. (Mech)	,,	,,
10	S. N. சுப்பிரமணியன் B E (Mech)	ஆத்தங்குடி	,,
11	M. AR. மெய்யப்பன் B. E. (Mech)	ஓ. சிறுவயல்	,,
12	G. இராமநாதன் B. E. (Mech)	கீழச்சிவற்பட்டி	,,
13	S. சேது B. E. (Mech)	வெற்றியூர்	,,
14	RM. நடராஜன் B. E. (Mech)	மிதிலைப்பட்டி	,,
15	RM. கணபதி B. E. (Mech)	செவ்வூர்	,,
16	PR. இராமநாதன் B. E. (Ele)	,,	,,
17	R. முத்து B E (Mech)	கொத்தமங்கலம்	,,
18	M. முத்துப் பழனியப்பன் B.E. (Mech)	இராங்கியம்	,,
19	T. தேனப்பன் B. E. (Chem)	கானாடுகாத்தான்	,,
20	PL. திருநாவுக்கரசு B. E. (Mech)	அரிமளம்	,,
21	மெய்யப்பன் B. E.	ஆத்தங்குடி	,,
22	PL. இராமநாதன் B. E	வேகுப்பட்டி	,,
23	பிச்சப்பன் B. E (Chem)	தேவகோட்டை	,,
24	RM. வள்ளியப்பன் B. E.	P. புதுப்பட்டி	,,
25	V, வெங்கடாசலம் B. E.	பலவான்குடி	,,
26	VR. சேதுராமன் B. E.	,,	,,
27	RM. லக்ஷ்மணன், B. E., A.M.A.I.E.E.	தேவகோட்டை	காரைக்குடி அழகப்பா கல்லூரி
28	S. பழனியப்பன், B. E. M. S. (Wisconsin (U. S. A)	இராமச்சந்திரபுரம்	,,
29	AR. ராமசாமி B. E.	தேவகோட்டை	,,
30	M. அருணாசலம் B. E.	பள்ளத்தூர்	,,
31	KT. இராமசாமி B. E.	கீழச்சிவற்பட்டி	,,
32	A. சொணலிங்கம் B. E.	தேவகோட்டை	,,
33	PL. மெய்யப்பன் B. E.	வேந்தன்பட்டி	மதுரை, தியாகராசர் பொறியியற் கல்லூரி
34	S. இராமையா B. Sc., B. E.	கோனாபட்டு	,,
35	PR சோமசுந்தரம் B. E.	தேவகோட்டை	,,
36	SM. முத்துக்கருப்பன் B. E.	,,	விமானத்துறை-பங்களூர்
37	S. சேது B. E.	,,	ட்ராம்பே

38	M. சொக்கலிங்கம் B. E.	தேவகோட்டை	பரமக்குடி
39	VR. சேவுகஞ் செட்டி B.E. (Hons)	"	அமெரிக்கா
40	V. சிற்சபேசன் B. E.	"	
41	RM. சிங்காரம் B. E.	குளிபிறை	
42	A. சுத்தானந்தன் B. E	இராமச்சந்திரபுரம்	அண்ணாமலை நகர்
43	PR. SL. சோமசுந்தரம் B. E.	தேவகோட்டை	"
44	AV. கண்ணப்பன் B.E.	நாட்டரசன்கோட்டை	சவுத்இந்தியாகார்ப்ரேஷன்
45	M. அழகப்பன் B. E. (Civil)	கண்டனூர்	அண்ணாமலை பாலிடெக்னிக் செட்டிநாடு
46	N. வெங்கடாசலம் B. E. (Civil)	இராமச்சந்திர புரம்	காரைக்குடி அழகப்பா கல்லூரி
47	N. வள்ளியப்பன் B. E. (Mech)	பூலாங்குரிச்சி	"
48	PR. சொக்கலிங்கம் செட்டியார் B.E.	குளிபிறை	மீனாட்சி ஆலை மதுரை
49	AR. இராமசாமி B. E.	இராயவரம்	"
50	M. கனகசபை B. E.	ஆ. தெக்கூர்	"
51	VR. அழகப்பன் B. E. (Mech)	பள்ளத்தூர்	T. I. Cycles of India, Madras.
52	AR. அழகப்பன் B. E. (Mech)	கானாடுகாத்தான்	"
53	முத்தையா B. E. (Mech)	கீழச்சிவற்பட்டி	"
54	A. சுப்பிரமணியன் B. E. (Mech)	கோட்டையூர்	"
55	L. சிதம்பரம் B. E. (Mech)	பள்ளத்தூர்	Dunlop Rubber Co., Madras
56	PL. பழனியப்பன் B. E. (Mech)	"	India Radiators Ltd., Redhills, Madras
57	A. அருணாசலம் B. E. (Ele)	"	Madras State Ele. Board
58	O. பெரிய கருப்பன் B. E. (Civil)	கண்டனூர்	Heavy Electrical Trichy
59	SP. நாராயணன் B. E. (Civil)	கண்டரமாணிக்கம்	"
60	SP. சுப்பிரமணியன் B. E. (Civil)	தேவகோட்டை	P.W.D. சென்னை.
61	S முருகப்பன் B. E. (Civil)	விராச்சிலை	P.W.D. சிவகங்கை
62	RM. காசிவிஸ்வநாதன் B. E (Civil)	கோட்டையூர்	P.W.D. திருவாரூர்
63	AL. இராமநாதன் B. Sc., B E.	கானாடுகாத்தான்	Standard Motors Madras.
64	K. நாகப்பன் B. E. (Hons)	அரிமளம்	அமெரிக்கா
65	SM. வள்ளியப்பன் B. E.	தேவகோட்டை	"
66	MR. இராமையா B. E.	கோட்டையூர்	Madras State Ele. Board
67	C. இராமநாதன் B. E.	"	Roorkela Steel Project
68	KR. வைரவன் B. E.	கீழச்சிவற்பட்டி	Food Production Devakottai
69	CT. V. சிதம்பரம் B. E.	சொக்கநாதபுரம்	
70	S. இரத்தினம் B. E.	நாச்சியாபுரம்	

மருத்துவப் பணியாற்றுபவர்கள்

	பெயர்	சொந்த ஊர்	பணிபுரியும் இடம்
1	டாக்டர் எஸ். சண்முகம் செட்டியார் எம் பி. பி. எஸ். எப். ஆர். சி. எஸ்.	பி. புதுப்பட்டி (Edin)	மதுரை
2	டாக்டர் எம்ஆர். முத்தையா எம். பி. பி. எஸ்.	கோட்டையூர்	மதுரை
3	டாக்டர் எம், சேதுராமன் எம். பி பி. எஸ்.	ஆத்தங்குடி	மதுரை
4	டாக்டர் எஸ். இராமநாதன் எம். பி. பி. எஸ்.	சொக்கநாதபுரம்	மதுரை
5	டாக்டர் எஎல். அண்ணாமலை எம்.ஆர்.சி.பி டி டி எம் & எச்.	கானாடுகாத்தான்	சென்னை
6	டாக்ட எம் சிதம்பரம் எம். பி பி. எஸ்.	நச்சாந்துபட்டி	சென்னை
7	டாக்டர் சிடி. அழகப்பன் எம். பி பி எஸ்.	இராமச்சந்திரபுரம்	சென்னை
8	டாக்டர் பிஎல். மெய்யப்பன் எம். பி. பி எஸ்.	கல்லுப்பட்டி	டெல்லி
9	டாக்டர் நாச்சியப்பன் எம். பி. எஸ் , டி, டி. டி.	கீழச்சிவற்பட்டி	
10	டாக்டர் சிடி., சுப்பிரமணியன் எம். பி. பி. எஸ்.	கண்டனூர்	
11	டாக்டர் ஏ.முத்தையா எம் பி பி எஸ்.	பனையப்பட்டி	
12	டாக்டர் வி. வீரப்பன் எம் பி. பி. எஸ்.	தேவகோட்டை	காரைக்குடி
13	டாக்டர் எஸ் காசி எம் பி பி.எஸ்.	செம்பனூர்	இராமநாதபுரம்
14	டாக்டர் அண்ணாமலை எம். பி. பி. எஸ்.	கீழச்சிவற்பட்டி	
15	டாக்டர் பிஆர். அண்ணாமலை எம். பி. பி. எஸ்.	குளிபிறை	மலேயா
16	டாக்டர் எம். பிஎல். ஏகப்பா எம். பி பி. எஸ் , ஜே பி.	மகிபாலன்பட்டி	மலேயா
17	டாக்டர் எஸ்பி. பர்வதவர்த்தினி எம். பி. பி. எஸ்.	இராமச்சந்திரபுரம்	சென்னை
18	டாக்டர் என். அன்புக்கிளி எம். பி. பி. எஸ்.	காரைக்குடி	
19	டாக்டர் மணிமேகலை எம். பி. பி. எஸ்.	காரைக்குடி	
20	என். ஆனந்தி எம். பி. பி. எஸ். (இறுதி ஆண்டு)	பனையப்பட்டி	

ஆராய்ச்சித்துறையில் பட்டம் பெற்றவர்கள்

	பெயர்	சொந்த ஊர்	பணிபுரியும் இடம்
1	டாக்டர் வீ.ஆர் இராமநாதன் எம். எஸ்ஸி. பிஎச் டி.	புதுவயல்	மலேயா சர்வகலாசாலை
2	டாக்டர் மெ. சுந்தரம் எம். ஏ. எம். லிட்.	வேந்தன்பட்டி	Madras University Extension Library, Madurai.
3	டாக்டர் வ. சுப. மாணிக்கம் எம். ஏ., எம் ஓ. எல் பிஎச். டி	மேலைச்சிவபுரி	அழகப்பா கல்லூரி
4	டாக்டர் எஸ்எம். லக்ஷ்மணன் செட்டியார் எம். எஸ்ஸி. பிஎச். டி, டி ஐ. சி.	மதகுபட்டி	அண்ணாமலை சர்வகலாசாலை
5	சுப. அண்ணாமலை எம்.ஏ. எம் லிட்.	தேவகோட்டை	தியாகராசர் கல்லூரி, மதுரை
6	ஆர். எம். அருணசலம் எம். ஏ., எம். லிட்.	அரிமளம்	அமெரிக்கா

கணக்காய்வாளர்களின் விபரம்

(Chertered Accountants)

	பெயர்	ஊர்	பணிபுரியும் இடம்
1	பெரி. தியாகராஜ்	குளிபிறை	மதுரை
2	S. M. இராமநாதன்	தேவகோட்டை	—
3	Y. சத்தியமூர்த்தி	காட்டரசன்கோட்டை	சென்னை
4	S. விஸ்வநாதன்	நாச்சியாபுரம்	—
5	SP. ST. பழனியப்பன்	காரைக்குடி	சென்னை
6	S. திருநாவுக்கரசு	செவ்வூர்	திருச்சி
7	N.AR. சின்னநாராயணன்	கோட்டையூர்	சென்னை
8	பிச்சக்குட்டி	தேவகோட்டை	சென்னை
9	VR. வீரப்பன்	நடராஜபுரம்	மதுரை
10	ST. அண்ணாமலை	ஒக்கூர்	—
11	TR. சொக்கலிங்கம்	காரைக்குடி	சென்னை
12	SV. முத்தப்பன்	சண்முகநாதபுரம்	"
13	RM. சபாரத்தினம்	நெற்குப்பை	மதுரை
14	S. அழகப்பன்	காரைக்குடி	—
15	PL. இராமசாமி	கானாடுகாத்தான்	—
16	C. லக்ஷ்மணன்	குளிபிறை	
17	PL. செல்லப்பன்	இராயவரம்	மதுரை
18	R . வள்ளியப்பன்	நச்சாந்துபட்டி	—

வழக்கறிஞர்கள்

	K. ராமநாதன் செட்டியார்	B.A., B.L.,	பள்ளத்தூர் (மலேயா)
1	N. நெல்லியான் செட்டியார்	" "	பள்ளத்தூர்
2	M. சொக்கலிங்கம்	B. Sc., B. L.,	ஆ. தெக்கூர்
3	S. சீனிவாசன்	B. A., B. L.,	ஆ. தெக்கூர்
4	S. மெய்யப்பன்	" "	புதுவயல்
5	L. சொக்கலிங்கம்	" "	காரைக்குடி
6	V. கண்ணன்	" "	தானிச்சாவூரணி
7	N. பழனியப்பன்	" "	காரைக்குடி
8	விவேகாநந்தன்	" "	காரைக்குடி
9	A. கனகசபை	" "	வேந்தன்பட்டி
10	VR. சிவராமன்	M. A., B. L.,	P. அழகாபுரி
11	KM. N. SP. சுப்பையா	B. A., B. L.,	செம்பனூர்
12	N. இராமசாமி	" "	கிழச்சிவற்பட்டி
13	S. சோமசுந்தரம்	—	தேவகோட்டை
14	L அழகுசுந்தரம் செட்டியார்	Barrister-at-Law	கண்டரமாணிக்கம்
15	T. சுப்பையா	Barrister-at-Law.	கல்லல் (மலேயா)
16	K. அழகப்பன்	B. A. B. L.	காரைக்குடி

மலேயாவில் உயர்ந்த பதவியில் இருப்பவர்கள்

	பெயர்	சொந்த ஊர்
1	திரு. மு. நா. ஏகப்ப செட்டியார் J. P.	தேவகோட்டை
2	" A. R. A. நாச்சியப்ப நாடார் J. P.	கண்டரமாணிக்கம்
3	" ☰. S. மெய்யப்ப செட்டியார் J. P.	"
4	" வீர. சோம. சோமசுந்தரம் செட்டியார் J. P.	பட்டமங்கலம்
5	" Dr. M. P. L ஏகப்ப செட்டியார் J. P.	மகிபாலன்பட்டி
6	" V. லெட்சுமணன் செட்டியார் J. P. (சட்டமன்ற உறுப்பினர்)	மிதிலைப்பட்டி
7	" KR. பெத்தபெருமாள் M. A., B. Com, (Labour Welfare Officer)	தேவகோட்டை
8	" K. இராமநாதன் செட்டியார், B. A., B. L.	பள்ளத்தூர்
9	" மு. க. பெரி மு. சோமசுந்தரம் செட்டியார் (Incometax Officer)	தேவகோட்டை
10	" KR. S. சாத்தப்ப செட்டியார் (சட்டமன்ற உறுப்பினர்)	சிராவயல்
11	" செ. ராம. இராமசாமி செட்டியார் (சட்டமன்ற உறுப்பினர்)	அரிமளம்
12	Dr. PR, அண்ணாமலை செட்டியார் M B. B. S. (Medical Officer)	குளிபிரை

ஐக்கிய நாடுகள் அவை அலுவலர், அமெரிக்கா

திரு. அ. அழகப்பன் M. A., Basrister-at-Law ("ஆல்ஜி") கானாடுகாத்தான். ஷெயாரின் சகோதரர்கள்.

திரு. அ. அருணாசலம் I. R. S.
" அ. வள்ளியப்பன் I. R. S.—இருவரும்

டில்லியில் வருமான வருவாய்த்துறை (Income Tax Officers) மேல் அதி காரிகளாகப் பணியாற்றி வருகிறார்கள்.

வானொலி அலுவலகம்

வேந்தன்பட்டி திரு. மெ. திருநாவுக்கரசு (மெ. திரு. அரசு)—மலேயா வானொலியில் கல்வி ஒலி பரப்பு அலுவலர்.

விமானம் ஓட்டுபவர் (Air Pilot)

ஸ்பெயின் வீரப்பா — புதுவயல்

பத்திரிகை நாள் இதழ் ஆசிரியர்கள்

'தமிழ் நாடு' — மதுரை, சென்னை.—கருமுத்து தியாகராசன் செட்டியார்
'தமிழ் நேசன்' — கோலாலம்பூர் — வலையபட்டி மலையாண்டி செட்டியார், ஆத்தங்குடி முருகு சுப்பிரமணியன்.
'தென்றல் திரை' — சென்னை — கவிஞர் கண்ணதாசன்.
'வீரகேசரி' — கொழும்பு — ஆவினிப்பட்டி பெ. பெரி. சுப்பிரமணியன் செட்டியார்.
'குமுதம்' (வார இதழ்) — சென்னை — S.A.P. அண்ணாமலை M. A., B L., கானாடுகாத்தான்.
'கல்கண்டு' (வார இதழ்) — சென்னை — தமிழ்வாணன், தேவகோட்டை.

நூல் வெளியீட்டாளர்கள்

சக்தி வை கோவிந்தன் (தலைவர் தென் இந்திய புத்தகத் தொழிற் கழகம்) இராயவரம்.
செ. மெ. பழனியப்ப செட்டியார்—இராயவரம்.
பழனியப்பா பிரதர்ஸ் — சென்னை, திருச்சி.
செ. செல்லப்பன், அரிமளம் — மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
சின்ன அண்ணாமலை, தேவகோட்டை — தமிழ்ப் பண்ணை, சென்னை.

உலக வங்கி (World Bank)

Dr. MR. மாதவன், M. A., Ph. D., கண்டரமாணிக்கம்.

கல்லூரிப் பேராசிரியர்கள்

1. புதுவயல் Dr. VR. இராமநாதன் செட்டியார் M. Sc., Ph. D. மலேயா சர்வ கலாசாலை, கோலாலம்பூர்.
2. மதகுபட்டி Dr. SM. லக்ஷ்மணன் செட்டியார் M. Sc., Ph. D., D. I. C. (Dept. of Technology) அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
3. கோனாபட்டு PL. இராமசாமி M. A., M. Sc., அண்ணாமலைப் பல்கலை கழகம்
4. பள்ளத்தூர் R. M. இராமநாதன் M. A. அழகப்பா கல்லூரி, காரைக்குடி.
5. சண்முகநாதபுரம் Dr. சண்முகநாதன், பச்சையப்பன் கல்லூரி. சென்னை.
6. கானாயார்மங்கலம் இராம. சேதுநாராயணன், Professor in Concrete Technology அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

கவிஞர்கள்

1	திரு.	"சைவசித்தாந்தச் சரபவள்ளல்"	
	"	பாலகவி வயிராகரம் வே. இராமநாதன் செட்டியார்	தேவகோட்டை
2	"	கவிஞர் கண்ணதாசன்	காரைக்குடி
3	"	V. RM. செட்டியார்	காரைக்குடி
4	"	கவிஞர் அரு சோமசுந்தரன்	தேவகோட்டை
5	"	கதி சுந்தரம்	வலையபட்டி
6	"	'தமிழண்ணல்' இராம. பெரிய கருப்பன்	நெற்குப்பை
7	"	பெரி. சிவனடியான்	இராயவரம்
8	"	வே. அண்ணாமலை	வலம்புரி
9	"	முருகு சுப்பிரமணியன்	ஆத்தங்குடி
10	"	நாரா. நாச்சியப்பன்	"
11	"	அழ. வள்ளியப்பா	இராயவரம்

எழுத்தாளர்கள்

1	திரு.	A. K. செட்டியார்	கோட்டையூர்
2	"	'உலகம் சுற்றிய தமிழர்' சோம லெ லட்சுமணன் செட்டியார்	நெற்குப்பை
3	"	இராய சொ. சொக்கலிங்கம் செட்டியார்	காரைக்குடி
4	"	வலம்புரி சோமநாதன்	வலம்புரி
5	"	அரு. இராமநாதன்	கண்டனூர்
6	"	M. SP. சண்முகம் M. A,	கொத்தமங்கலம்
7.	"	SP. இராமன்	இராமச்சந்திரபுரம்

பாராளுமன்ற உறுப்பினர்

1	திரு.	R. இராமநாதன் செட்டியார் M. P.	கானாடுகாத்தான்
2	"	N. அருணாசலம் செட்டியார் M. P.	தேவகோட்டை

சட்டமன்ற உறுப்பினர்

சா. கணேசன் M. L. A. — காரைக்குடி

மேல்சபை உறுப்பினர்

SP. K. AL. லக்ஷ்மணன் செட்டியார் (கமர்ஷியல் ட்ரான்ஸ்போர்ட்ஸ்) — சோமபுரம்

தொழில் அதிபர்கள்

1	கருமுத்து. தியாகராசன் செட்டியார்	Textile Industry, Sugar Mills and Banking
2	A. M. M. முருகப்ப செட்டியார்	T. I. Cycles of India Ltd.,
3	ராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார் கானாடுகாத்தான்	Cement Textiles and Coffee Tea Estat,es Travancore Rayons
4	M. CT. M. முத்தையா செட்டியார் கானாடுகாத்தான்	Premier Fertilizers, Banking and Rayons
5	L. அழகுசுந்தரம் செட்டியார் கண்டரமாணிக்கம்	Textile Industry and Shipping
6	L. நாராயணன் செட்டியார் கண்டரமாணிக்கம்	Textile Industry, Coffee and Tea Estates
7	M. S. சொக்கலிங்கம் செட்டியார் பூலாங்குரிச்சி	Textile Industry
8	SP. A. நடராஜன் செட்டியார் பனையப்பட்டி	"
9	A. K. A. CT. AL. சிதம்பரம் செட்டியார் கோட்டையூர்	"
10	மு. அ. பழனியப்ப செட்டியார், பள்ளத்தூர்	"
11	P. S. S. சோமசுந்தரம் செட்டியார் தேவகோட்டை	"
12	O. A. PR. M. அருணாசலம் செட்டியார் பள்ளத்தூர்	"
13	கும. நா. சுப. நா. மாணிக்கம் செட்டியார் செம்பானூர்	"
14	மெ. செ. மெ. மெ. சொக்கலிங்கம் செட்டியார் காரைக்குடி	Glass factory Sugar & Strawboard
15	M. A சிதம்பரம் செட்டியார் கானாடுகாத்தான்	Automobiles Screw Factory
16	A. நாகப்ப செட்டியார் மேலச்சிவபுரி	India Leather Corporation
17	M. P. M. நாராயணன் செட்டியார் கொப்பனாபட்டி	"
18	L. CT. PL. பழனியப்ப செட்டியார் கண்டனூர்	Textile Industry
19	S. RM. CT. PL. பழனியப்ப செட்டியார் கானாடுகாத்தான்	Transport
20	P. வெங்கடாசலம் கொத்தமங்கலம்,	Plywood Factory
21	சுப. அருணாசலம், பள்ளத்தூர்	Textiles
22	V. வீரப்பன், புதுவயல்	Photography Paper Mfg (Libra).
23	O. M. SP. L .M மெய்யப்ப செட்டியார், தேவகோட்டை	Textile Industry

திரைப்படத் தொழில் அதிபர்கள்

1	திரு. AV. மெய்யப்ப செட்டியார்	காரைக்குடி
2	" AL. சீனிவாசன் செட்டியார்	சிறுகூடற்பட்டி
3	" கவிஞர் கண்ணதாசன்	காரைக்குடி

நகரத்தார் சங்கம், மதுரை

சங்கப் புரவலர்கள்

டாக்டர் ராஜா சர். மு. அ. முத்தையா செட்டியார், 1956—

டாக்டர் RM. அழகப்ப செட்டியார் 1956—57

திரு. அ. மு. மு. முருகப்பச் செட்டியார், 1961—

தலைவர் :

திரு. கருமுத்து. தியாகராஜன் செட்டியார், 1956—

துணைத் தலைவர்கள் :

திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்
திரு. வ. ராம. வள்ளியப்ப செட்டியார் } 1956—1961

திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்
திரு. மெ. செ. மெ. மெ. மெய்யப்ப செட்டியார் } 1961—62

திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார், 1962—

பொருட்காப்பாளர்கள் :

திரு. இராம ஆறு. சுப்பிரமணியன் செட்டியார், 1956—62

திரு. சுப. அ. நடராசன் செட்டியார், 1962—

செயலர்கள் :

திரு. M. சொக்கலிங்கம்
திரு. செ. செல்லப்பன் } 1956—1957

திரு. அரு. தியாகராசன்
திரு. செ. செல்லப்பன் } 1957—1958

திரு. அரு. தியாகராசன்
திரு. சுப. அண்ணாமலை } 1958—1962

திரு. அரு. தியாகராசன்
திரு. பெரி. உடையப்பன் } 1962—

நிதி வசூல் குழு

திரு. லெ. அழகுசுந்தரம் செட்டியார்
" இராம. ஆறு. சுப்பிரமணியன் செட்டியார்
" தி. சுந்தரம் செட்டியார்
" லெ. நாராயணன் செட்டியார்
" அரு. தியாகராசன் செட்டியார்
" நா. சுப. நாகப்ப செட்டியார்
" மெ. சு. உ. சுப. வே. வேலாயுதம் செட்டியார்
" சிக. அரு. க. அரு. சோமசுந்தரம் செட்டியார்
" AR. L. இராமநாதன் செட்டியார்
" RM. முத்துப்பழனியப்ப செட்டியார்
" மெ. வ. வ. வள்ளியப்ப செட்டியார் } Co-opted.
" பெரி. தியாகராஜ் }

ஐயாயிரம் உறுப்பினர்கள் கொண்டதாக

நகரத்தார் சங்கம்

வளர்ந்தோங்க ஒத்துழைப்புத் தாரீர் !

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு" —திருக்குறள்

ஒவ்வோர் உறுப்பினரும் புத்துறுப்பினர்
ஒருவரைச் சேர்த்துத் தாரீர்!

விஜயா பிரிண்டர்ஸ் மதுரை-63.